**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM. RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**

**SC.No.53/2025 - PW- 7**

| | |
|---|---|
| Name | திருமதி. மகாலட்சுமி |
| Husband/Father Name | பாலகிருஷ்ணன் |
| Village /Area | கிழவனம் |
| Taluk | அரக்கோணம் |
| Occupation | கூலி |
| Age | 39 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 30.10.2025.

**(எதிரிகள் ஆஜர்).**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்த சந்திரன் என்னுடைய கொழுந்தனார் ஆவார். அசா.1 என்னுடைய கொழுந்தனாரின் மனைவி. அசா.2 என்னுடைய கணவர் ஆவார். அசா.3 என்னுடைய சிறிய கொழுந்தனார். ஆஜர் எதிரி சுப்பிரமணி என்னுடைய சின்ன மாமனார். கடந்த 05.09.2024 அன்று மாலை 04.15 மணிக்கு வேலை செய்த கூலி பணத்தை வாங்கி வர சென்றார். அப்போது கீதா மற்றும் அவரது மகன் ஆகாஷும் வண்டியில் சென்ற சந்திரனை கீழே தள்ளி சண்டை போட்டார்கள்.

அப்போது எத்திராஜ் என்பவர் வீட்டில் இருந்து கத்தியை எடுத்து வந்து சந்திரன் என்பவரின் இடது கையின் உள்ளங்கை மீதும், தலையின் பின்பக்கதிலும் கத்தியால் வெட்டினார். அப்போது அவர் நிலைத்தடுமாறி கீழே விழுந்தார். பிறகு சுப்பிரமணி என்பவர் சந்திரன் பின் தலையில் மீது கல்லை தூக்கிப்போட்டார். பிறகு சரவணன்

என்பவர் எத்திராஜ் கையில் இருந்த கத்தியை பிடிங்கி சந்திரனின் பின்னந்தலையில் வெட்டினார். பிறகு சரவணன் சுப்பிரமணி போட்ட அதே கல்லை தூக்கி சந்திரனின் தலையில் போட்டார்.

பிறகு ஆம்புலன்சிற்கு தகவல் கொடுத்து திருத்தணி அரசு மருத்துவமனைக்கு காயம் பட்ட சந்திரனை அழைத்துச்சென்றோம் அங்கு பரிசோதித்த மருத்துவர் இரவு 08.30 மணியளவில் சந்திரன் இறந்து விட்டதாக கூறினார்.

என்னிடம் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் கத்தி தான் எதிரி எத்திராஜ் மற்றும் சரவணன் என் கொழுந்தனாரின் தலையில் வெட்ட பயன்படுத்திய கத்தியாகும் அது ஏற்கனவே சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. என்னிடம் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் கல்லால் தான் எதிரி சுப்பிரமணி என் கொழுந்தனாரின் தலையில் தூக்கி போட்டு கொலைசெய்தார். அது ஏற்கனவே சா.பொ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக கிராமிய காவல் ஆய்வாளர் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகி இருந்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

Jayamangalam Sudhakaran

II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2025.10.30 19:05:54 +0530

II Additional District and Sessions Judge,
Arakkonam.